சார்பு நீதிமன்றம், குளித்தலை
MCOP.NO. **383 / 2022**

மனுதாரர் / எதிர்மனுதாரர் **ம.சா.1** வது சாட்சி இருக்கை எழுத்தர் நிலை – II திருமதி.V.தனம் அவர்களால் 44/1969 பிரிவின்படி **02.03.2024** ஆம் தேதியில் எடுக்கப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | ஆயிஷா சித்திக்கா | கிராமம் : | |
| க/பெ: | காதர் ஒலி சேட் | வட்டம் : | |
| மதம் : | | தொழில்: | |
| ஜாதி : | | வயது : | |

<u>முதல் விசாரணை</u>

நான் இந்த மனுவின் 1வது மனுதாரர் ஆவேன். எனது சாட்சியத்தை நிருபண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். எனது தரப்பு ஆவணங்களை தாக்கல் செய்கிறேன்.

1. முதல் தகவல் அறிக்கை சான்றிட்ட நகல் ம.சா.ஆ.1
2. சட்டப்பிரிவு மாற்று அறிக்கை சான்றிட்ட நகல் ம.சா.ஆ.2
3. பிரேத பரிசோதனை அறிக்கை சான்றிட்ட நகல் ம.சா.ஆ.3
4. மாதிரி வரைபடம் சான்றிட்ட நகல் ம.சா.ஆ.4
5. பார்வை மகசர் சான்றிட்ட நகல் ம.சா.ஆ.5
6. குற்ற இறுதி அறிக்கை சான்றிட்ட நகல் ம.சா.ஆ.6
7. ஆதார் அடையாள அட்டை நகல் ம.சா.ஆ.7 ( அசலுடன் ஒப்பீடு செய்து குறியீடு செய்யப்பட்டது.)
8. 2ம் மனுதாரர் ஆதார் அடையாள அட்டை நகல் ம.சா.ஆ.8 ( அசலுடன் ஒப்பீடு செய்து குறியீடு செய்யப்பட்டது.)
9. 3ம் மனுதாரர் ஆதார் அடையாள அட்டை நகல் ம.சா.ஆ.9 ( அசலுடன் ஒப்பீடு செய்து குறியீடு செய்யப்பட்டது.)
10. 4ம் மனுதாரர் ஆதார் அடையாள அட்டை நகல் ம.சா.ஆ.10 ( அசலுடன் ஒப்பீடு செய்து குறியீடு செய்யப்பட்டது.)
11. 5ம் ஆதார் மனுதாரர் அடையாள அட்டை நகல் ம.சா.ஆ.11 ( அசலுடன் ஒப்பீடு செய்து குறியீடு செய்யப்பட்டது.)
12. காதர் ஒலி சேட் இறப்பு சான்று இணையதள நகல் ம.சா.ஆ.12
13. காதர் ஒலி சேட் வாரிசு சான்று இணையதள நகல் ம.சா.ஆ.13

எனது சாட்சியத்தை ஏற்று மனுப்படி உத்தரவாக வேண்டுகிறேன்.

<u>குறுக்கு விசாரணை</u>

நான் இந்த விபத்தை நேரில் பார்க்கவில்லை. இந்த விபத்தை பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். விபத்து சமயத்தில் எனது கணவர் இருசக்கர வாகனம் ஓட்டிச்சென்றார். எனது கணவர் ஓட்டிச்சென்ற இருசக்கர வாகனத்தின் காப்பீடு நிறுவனத்தை தரப்பினராக சேர்க்கததால் இந்த

வழக்கு குறைபாடு உடையது என்றால் சரியல்ல. எனது கணவருக்கு இருசக்கர வாகனம் ஓட்டுவதற்கு ஓட்டுநர் உரிமம் உள்ளதா என்றால் எனக்கு தெரியாது. எனது கணவருக்கு இருசக்கர வாகனம் ஓட்டுவதற்கு ஓட்டுநர் உரிமம் இல்லாமல் இருசக்கர வாகனத்தை ஓட்ட தெரியாமல் ஓட்டி கவனக்குறைவாக சென்று விபத்தை ஏற்படுத்திக்கொண்டார் என்றால் சரியல்ல. இந்த விபத்தில் எனது கணவர் இறந்துவிட்டதால் எங்கள் குடும்பத்திற்கு நஷ்டஈடு கிடைக்கவேண்டும் என்பதற்காக 1ம் எதிர் மனுதாரர் மீது தவறாக முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார்கள் என்றால் சரியல்ல. எனது கணவரின் வருமானத்தை காட்டுவதற்கு ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. எனது கணவரின் வயது, தொழில், வருமானத்தை காட்டக்கூடிய ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. 2 முதல் 5 மனுதாரர்கள் படித்து நல்ல நிலையில் உள்ளார்கள் என்றால் தற்போது தான் படித்துக்கொண்டிருக்கிறார்கள். எனது கணவரின் வருமானத்தை நம்பி எனது குடும்பத்தில் யாரும் இல்லை என்றால் சரியல்ல. எனது கணவர் மீது மோதிய ஆட்டோ ஓட்டுநருக்கு ஓட்டுநர் உரிமம் மற்றும் தகுதி சான்று இல்லை என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. 1ம் எதிர் மனுதாரர் காப்பீட்டு விதிமுறையை மீறியுள்ளதால் 2ம் எதிர் மனுதாரர் தான் இழப்பீடு வழங்கவேண்டும் என்றும் 3ம் எதிர் மனுதாரரைப் பொறுத்து இந்த மனு தள்ளுபடிக்கு உரியது என்றும் சொன்னால் சரியல்ல. நான் கோரியுள்ள இழப்பீடு அதிகமானது அது கிடைக்கதக்கது அல்ல என்றால் சரியல்ல.

ஒம்/- ஆயிஷா சித்திக்கா

M SHUNMUGA KANI
Digitally signed by M SHUNMUGA KANI
Date: 2024.03.06 18:18:08 +0530

சார்பு நீதிபதி,
குளித்தலை.